# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No. 39-2024

| L.W.1 P.W.1 | | |
|---|---|---|
| Name: | செந்தில்குமரன் | Caste: |
| Father's Name: | கணேசன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:43/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026
(எதிரி ஆஜர். )

**முன் விசாரணை:**

நான் தற்போது முடுக்குப் பண்ணைத்தெருவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு, ஒரு நாள் மதியம் எனது வீட்டிற்கு அருகில் உள்ள குளத்தில் சாமி கும்பிட செல்வதற்காக வந்தபோது, யாரோ ஒரு நபர் என்னிடம் தகராறு செய்து, தகாத வார்த்தைகளில் திட்டி, கத்தியால் குத்த வந்தார். அப்போது சுதாகரித்துக் கொண்டு தடுத்தபோது எனது கையில் காயம் ஏற்பட்டது. கத்தியை காட்டி, கொலை மிரட்டல் விடுத்தார். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சில நாட்களுக்கு முன்பு, ஆஜர் எதிரிக்கும் எனக்கும் வாய் தகராறு ஏற்பட்டது. மேற்படி முன் விரோதத்தில் ஆஜர் எதிரி தான் என்னை தாக்கியிருப்பார் என்று சந்தேகத்தின் பேரில் மிகைப்படுத்தி போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன். சம்பவ இடத்தில் எதிரியை நான் பார்க்கவில்லை. **என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னிட்டு, போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154/ பிரிவு 157 BSA-ன் படி விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**<u>அரசு தரப்பில் விசாரணை</u>**

ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். எனது பக்கத்து ஊர்க்காரர். ஆஜர் எதிரியுடன் நான் தற்போது சமாதானமாகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால், நான் எழுதவில்லை, போலிசார் எழுதினார்கள். அதில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது. கடந்த 15.01.2024 அன்று மதியம் 12.45 மணியளவில் எனது வீட்டிற்கு அருகில் உள்ள குளத்தில் சாமி கும்பிடுவதற்காக குளத்தில் கரும்பை அலசியபோது ஆஜர் எதிரி காரில் வந்து, என்னை தகாத வார்த்தைகளில் திட்டி, கத்தியால் குத்தி, ரத்தக்காயத்தை ஏற்படுத்தியதாகவும், கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரி ஊர்க்காரர் என்பதாலும், அவரோடு சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டி, உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 01.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 39-2024**

| L.W.3 P.W.2 | | |
|---|---|---|
| Name: | நதியா | Caste: |
| Husband's Name: | சுப்பிரமணியன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026
(எதிரி ஆஜர். )

**முன் விசாரணை:**

நான் தற்போது முடுக்குப் பண்ணைத்தெருவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154/ பிரிவு 157 BSA-ன் படி விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பில் விசாரணை**

ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும்.அவர் கூத்தங்குடி ஊரைச் சேர்ந்தவர். கடந்த 15.01.2024 அன்று மதியம் 12.45 மணியளவில் அ.சா.1 தனது வீட்டிற்கு அருகில் உள்ள குளத்தில் சாமி கும்பிடுவதற்காக குளத்தில் கரும்பை அலசியபோது ஆஜர் எதிரி காரில் வந்து, அ.சா.1-ஐ தகாத வார்த்தைகளில் திட்டி, கத்தியால் குத்தி, ரத்தக்காயத்தை ஏற்படுத்தியதாகவும், கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், இதனை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரி பக்கத்து ஊரைச் சேர்ந்தவர் என்பதாலும், அவரோடு அ.சா.1 சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டி, உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 01.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No. 39–2024

| L.W.8 P.W.3 | | |
|---|---|---|
| Name: | சுப்பிரமணியன் | Caste: |
| Father’s Name: | பன்னீர்செல்வம் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026
(எதிரி ஆஜர். )

**முன் விசாரணை:**

நான் தற்போது முடுக்குப் பண்ணைத்தெருவில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. **என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2–வது கையொப்பம் என்னுடையது தான். கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2–ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2–வது கையொப்பம் என்னுடையது தான். கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கையொப்பங்களை எங்கு, எதற்காக வைத்து செய்தேன் என்று தெரியவில்லை. பின்னிட்டு, போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154/ பிரிவு 157 BSA–ன் படி விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பில் விசாரணை**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், அவர்கள் எனது பக்கத்து ஊர்க்காரர். ஆஜர் எதிரியோடு தற்போதும் நான் நட்பு ரீதியாக பழகி வருகிறேன் என்றால் சரி. கடந்த 15.01.2024 அன்று மாலை 05.15 மணிக்கு நானும், எனது ஊரைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவரும் நடுத்தெரு குளம் அருகில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது, போலிசார் அன்றைய தினம் மதியம் ஆஜர் எதிரிக்கும், அ.சா.1–க்கும் இடையே நடந்த தகராறு

பற்றி விசாரித்து பார்வை மகஜர் தயார் செய்து, படம் வரைந்தார்கள் என்றும், பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக நான் கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு, தற்போது எதிரி பக்கத்து ஊரைச் சேர்ந்தவர் என்பதாலும், எதிரியோடு பழக்கத்தில் இருந்து வருவதாலும், சங்கதிகளை மறைத்து, எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 01.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**